DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | பாலமுருகன் (Lw - 11) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2023 முதல் 2024ம் வருடம் வரை எருமப்பட்டியில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 20.11.2023ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பி.சுப்ரமணியன் எருமப்பட்டி காவல்நிலைய அலுவலில் இருந்தபோது சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற கோபிநாத் என்பவரின் அடிதடி தகவலை பெற்று மருத்துவமனை சென்று பார்த்தபோது கோபிநாத் மயக்கநிலையில் இருந்ததால் அவரது அம்மா பிரேமாவிடம் சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.390/2023 இதச சட்ட பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை வழக்கின் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 20.11.2023ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளையராஜா, மாயவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை

மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். (பார்வை மகஜர் அ.சா.ஆ.**10** ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.) பின்ன அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 124 செ.மீ. அளவுள்ள தடி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.**12** ஆகவும், படிவம் **91** ஆ.சா.ஆ.**13** ஆகவும், **124** செ.மீ. அளவுள்ள தடி அ.சா.பொ.**1** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் சாட்சிகள் பிரேமா, கோபிநாத், வனிதா, பிரசாந்த், பழனிசாமி, இளையராஜா, மாயவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் கடந்த 21.11.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு முட்டாஞ்செட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

29.01.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.மணிகண்டன் மற்றும் மோகன்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். பின்பு இவ்வழக்கின் வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 294(b), 324, 506(ii) ல் இருந்து இதச 294(b), 326, 506(ii) ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.**14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இவ்வழக்கில் புலன் விசாரணையில் சம்பவத்தின்போது எதிரி ஆண்டி (எ) குமார் வாதியின் மகனை அடிக்கவோ, திட்டவோ இல்லை என்பது தெரியவந்ததால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.**15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச 294(b), 326, 506(ii)-ன் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் காயம்பட்ட கோபிநாத்துக்கும் அவரது மனைவி ரம்யா என்பவருக்கும் இடையே குழந்தை இல்லாததால் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்தது

என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்ட கோபிநாத் மதுபோதையில் அவரது மனைவி ரம்யாவை பாலியல் துண்புறுத்தல் செய்தார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் முட்டாஞ்செட்டி ஊரை சார்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் புலன் விசாரணை செய்தபோது சம்பவ இடத்தில் இருந்தார்கள்.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ள நபர்கள் யாரையும் விசாரித்து இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் யாரும் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் வாதி தனது புகாரில் எதிரி தனது மகனை இரும்பு பைப்பால் அடித்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இரும்பு பைப் எதையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி கோபிநாத் நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தபோது தன்னை இரண்டு நபர்கள் அடித்ததாகவும், சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது தன்னை மூன்று நபர்கள் அடித்ததாகவும் கூறியுள்ள நிலையில் அவர்கள் யார் என எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் வாதி பிரேமா புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் துரைமுருகன் மற்றும் ஆண்டி ஆகியோர் தனது மகனை அடித்ததாக கூறியுள்ளார். புலன் விசாரணையின்போது காயம்பட்ட சாட்சி கோபிநாத் எதிரி மட்டுமே தன்னை தாக்கியதாக கூறினார். எதிரி நீக்கல் அறிக்கையில் சண்டைய விலக்கிவிட்டதாக எதிரி ஆண்டி (எ) குமாரை இவ்வழக்கில் இருந்து நீக்கியதாக சொல்லியுள்ள நிலையில் அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அவரை நான் ஏன் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் புகார் வாக்குமூலத்தில் அவர் ஒரு எதிரியாக சேர்க்கப்பட்டிருந்ததால் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை.

இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி கோபிநாத் எதிரி குமாரின் காதில் பைக் சாவியால் குத்தி கிழித்ததில் அவருக்கு காதில் காயம் ஏற்பட்டு நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அது குறித்து புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு ஏதேனும் பதிவு செய்தேனா என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. காயம்பட்ட சாட்சியான கோபிநாத்துக்கு இதச பிரிவு 320ன் கீழ் சொல்லப்பட்டுள்ள கொடுங்காயம் ஏதேனும் ஏற்பட்டதை தெரிந்துகொண்டேனா என்றால் மருத்துவரின் காயச்சான்றிதழில் கொடுங்கயாம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட கோபிநாத் எதிரியை தாக்கியதில் அவருடைய வலது கையில்

கடுமையான தசைபிடிப்பு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் நான் எதிரியை கைது செய்யும் போது எதிரிக்கு எவ்வித காயமும் இல்லை. சாட்சி கோபிநாத் மதுபோதையில் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பேரில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் காயம்பட்ட சாட்சி தன்னை எத்தனை நபர்கள் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என குறிப்பிட்டு கூறியிருப்பார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட சாட்சி போலிசார் விசாரணையில் தெளிவாக கூறியுள்ளார். கைப்பபற்றப்பட்ட தடியை வாதி பிரேமா கூறியதன் அடிப்படையில் கைப்பற்றினோம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**